மெட்ரோ ரயில் வாகன நிறுத்தங்களில்

# பயண அட்டை மூலம் பணம் செலுத்தும் வசதி

## ● செப். 1ம் தேதி அமல் ● நிர்வாகம் அறிவிப்பு



சென்னை, ஆக 1: பயணிகளின் கோரிக்கையை தொடர்ந்து மெட்ரோ ரயில் வாகன நிறுத்தங்களில் பயண அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் வசதி வரும் செப். 1ம் தேதி அமல்படுத்தப்படும் என்று நிர்வாகம் அறிவித்துள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் பயணிகளுக்கு தடையற்ற போக்குவரத்தை எளிதாக்குவதற்கு சென்னை மெட்ரோ ரயில் பயண அட்டை மூலம் வாகன நிறுத்த கட்டணங்களை செலுத்தும் முறையை நிறுவனம் அறிமுகப்படுத்தியது. ஜூலை மாதம் முதல் சோதனை அடிப்படையில் அனைத்து ரயில் நிலையங்களிலும், இது அறிமுகப்படுத்தப்பட்டது.

இதை தொடர்ந்து இன்று இந்த திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்திருந்தது. இந்நிலையில் இந்த கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்று பயணிகளின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதையடுத்து பயண அட்டை மூலம் கட்டணம் செலுத்தும் முறை செப்.1ம் தேதி முதல் அமல்படுத்தப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

எனவே பயண அட்டை இல்லாத பயணிகள் ரயில் நிலையங்களில் உள்ள வாடிக்கையாளர் சேவை மையம் மற்றும் டிக்கெட் கவுண்டர்கள் மூலமாக பயண அட்டை வாங்கி கட்டணம் செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.